சூரிய காந்தி
SOORIYA GANDHI

விலை ரூபா 5-00

மலர் 1 செவ்வாய்க்கிழமை 10 - 3 - 1998 இதழ் 21

எதிர்பாராத காரணங்களினால்
அடுத்த மூன்று இதழ்களும்
வாரம் ஒருமுறையும்அதன்பின்னர்
புதிய பொலிவுடன் தினசரியாகவும்
"சூரிய காந்தி "வெளிவரும்

# கொழும்பு குண்டு தாக்குதல் புதிய கோணத்தில் விசாரணை

## கள்ளக் கடத்தல் போதைவஸ்து வியாபார கோஷ்டியும் சிக்கலாம்.

**கொழும்பு குண்டு வெடிப்பு தொடர்பாக புதிய கோணத்தில் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக சில செய்திகள் தெரிவிக்கின்றன.**

கொழும்பிலுள்ள பலம் வாய்ந்த பாதாள உலக கோஷ்டிகளுள் ஒன்று தங்களைக் குறித்து விசாரணைகளை மேற்கொண்டு வரும் ஒரு உயர் பொலீஸ் அதிகாரியை தீர்த்துக் கட்டுவதற்காக இந்த முயற்சியில் ஈடுபட்டிருக்கலாம் என்ற சந்தேகம் சில வட்டாரங்களில் எழுந்துள்ளது.

சில தினங்களுக்கு முன்னர் கொழும்பிலுள்ள ஒரு ''பிரபலஸ்தர்'' பொலீசாரினால் கைது செய்யப்பட்டிருந்தார் இவர்கள்ளக் கடத்தல் போதைவஸ்து வியாபாரம் போன்றவற்றில் ஈடுபட்டுவரும் கோஷ்டி ஒன்றின் ''பரமபிதா'' வாக செயல்பட்டு வந்ததாக கூறப்படுகிறது,

இவர் சில தினங்களுக்கு முன்னால் புதிய சோனகத் தெருவில் வைத்து கைது செய்யப்பட்டிருந்தார்,

இவர் கைது செய்யப்பட்ட போது இவரிடமிருந்து 595 கிராம் ''ஹீரோயின்'' என்ற போதைப் பொருளும்இரண்டு பிஸ்டல்களும் கைப்பற்றப் பட்டதாக பொலீஸ் வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது,

இவருக்கும்புலிப்படையுடன் நெருக்கமான சிலருக்குமிடையில் பல தொடர்புகள் இருந்தாகவும் இருசாராரும் பரஸ்பரம் ஒருவருக்கொருவர் உதவி புரிந்து வந்துள்ளதாகவும்பொலிஸ் வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது,

( 4 ஆம் பக்கம்பார்க்க )

## யாருக்கு உத்தியோகம்?

'ரெலிகொம்' உத்தியோகங்கள் மாத்தறை வாசிகளுக்குப் போகின்றன. இலங்கை மின்சார சபை,, உத்தியோகங்கள் கண்டியில் வசிப்பவர்களுக்கே கொடுக்கப் படுகின்றன. 'இலங்கை வங்கி,, உத்தியோகங்கள்.கம்பஹா மக்களுக்கே தரப்படுகின்றன -இவ்வாறு குறைப்பட்டுச் சொல்லியிருக்கிறார் ஆளும் கட்சியைச் சேர்ந்தவரான மொனராகலை மாவட்ட எம். பி விஜித முனி சொய்சா

'ரெலிகொம், முக்கு பொறுப்பான மந்திரி மங்கள சமரவீரா மாத்தறையைச் சேர்ந்தவர். இலங்கை மின்சார சபை,, க்குப் பொறுப்பான அனுருத்த ரத்வத்தை கண்டியைச் சேர்தவர். 'இலங்கை வங்கி, க்கு பொறுப்பான சந்சதிரிகா கம்பஹாவைச் சேர்ந்தவர்!

உத்தியோகம் வேண்டுமென்றால் சொந்தக்காரகவோ அல்லது சொந்த ஊர்க்காரராகவோ மந்திரியோ அல்லது வேறு பெரிய மனிதரோ இநக்கவேண்டும் என்ற நிலைதான் இந்த ஆட்சிலிலும் இருக்கிறது.

## அன்பு மிகுந்த வாசகர்களே!



நீங்கள் அளித்த மகத்தான ஆதரவுக்கும் காட்டிய பேரன்புக்கும் எனது உளம் நிறைந்தநன்றிகள்.

''இதோ யாழ்ப்பாணத்திலிருந்து புதிய ஒரு தினசரி'' என்று எல்லோரும் பெருமைப்பட்டுக் கொள்ளும் விதத்தில் ''சூரிய காந்தி'' தலைநிமிர்ந்தது. வளர்ந்தது.

''இத்தனை விரைவில் இவ்வளவு வளர்ச்சியா'' என்று பலரும் வியந்தார்கள் ''மகத்தான சாதனை'' என்று நல்லவர்கள் எல்லாருமே பாராட்டினார்கள்.

''போற்றுபவர் போற்றட்டும் புழுதிவாரித் தூற்றுபவர் தூற்றட்டும்; ஏற்றதொரு கருத்தை எனது நெஞ்சமென்றால் எடுத்துரைப்பேன்; எது வரினும் நில்லேன் அஞ்சேன்' என்ற மிடுக்கோடு ''சூரிய காந்தி'' தொடர்ந்து இதழ் விரித்துக் கொண்டு வந்தது.

பத்திரிகைப் பணியை புனிதப் பணியாகக் கருதியது.

பணம் பண்ணுவத்றகான ஒரு சாதனமாக பத்திரிகைத் தொழில் இருக்கக் கூடாது என்ற விஷயத்தில் மிகக் கவனமாக இருந்தது.

ஒவ்வெருநாளும் எத்தனையோ பிரச்சினைகள் முளைத்தன. நெஞ்சம் நிறைந்த உறுதி யோடு அவையெல்லாம் எதிர் கொள்ளப்பட்டன. ''சூரிய காந்தி ''யில் வெளிவந்த கட்டுரைகளும் ஆசிரியத் தலையங்கங்களும் வாசகர்களால் மிகுந்த விருப்பத்தோடு படிக்கப்பட்டன.

உற்சாகம் தரக்கூடிய முறையில் நிறைய வாசகர்கள் ஏராளமான கடிதங்களை எழுதினார்கள். நேரிலும் மனம் நிறைந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

ஆனால் ''சூரிய காந்தி '' மலரக் கூடாது என்பதில் சில சக்திகள் மிகத்தீவிரமாகச் செயல்பட்டன.

தர்மத்தை மீறிய வழியிலும் இறங்கின. ''இராணுவம் சூரிய காந்தியை தடைசெய்து விட்டது '' என்று ஒருபக்கம் கதை பரப்பப்பட்டது.

''சூரிய காந்தி'' பெயர் எழுதியிருந்தசுவர் சிவப்பு நிற வர்ணத்தினால் அசிங்கப் படுத்தப் பட்டு அதன் கீழே ''எல்.ரீ.ரீ.ஈ என்ற எழுத்துக்கள் சிவப்பு நிறத்தில் எழுதப்பட்டன. ''புலிகள் சூரிய காந்தியை தடைசெய்து விட்டார்கள்'' என்ற அபிப்பிராயம் மக்கள் மனதில் உருவாக வழி செய்யப்பட்டது.

வன்முறையைப் பயன்படுத்தி 'சூரிய காந்தி' அலுவலகத்தில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த அச்சிடும் தாள்கள் எடுத்துச் செல்லப்பட்டன.

தர்மத்தில் வாழ்வதனைச் சூது கவ்வும். ஆனால் மறுபடி தர்மம் வெல்லும் !

இதுதான் சத்தியம்.

'பத்திரிகைச் சுதந்திரம் பற்றி பெரிதாகக் கதை அளக்கிற நம்மஊர்பெரிய மனிதர்கள் எல்லாரும் வாய் மூடி மௌனியாய் இருந்ததுதான் மிகப் பெரிய வேடிக்கை!

சில காலத்துக்கு மிகக்குறுகிய காலத்துக்கு 'சூரிய காந்தி' யை வார இதழாகக் கொண்டு வருவது எனத் தீர்மானித்து இருக்கிறேன்.

உழைப்பதற்கு இருபத்தி நான்கு மணித்தியாலங்கள் போதாமல் இருக்கின்றன.

விரைவிலேயே''சூரிய காந்தி''யை தினசரிப் பத்திரிகையாக வெளியிடுவதற்கு என்னாலான சகல முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறேன்.

முதல் இதழில் நான் கூறியிருந்தது போல ''சூரிய காந்தி' ஸ்ரீமான் பொது ஜனத்தின் பத்திரிகை.

தொடர்ந்தும் அப்படியே இருக்கும்!

அன்புடன்.
சு. குமாரசாமி
ஆசிரியர்

# சமயம்

நினைப்பு, மறப்பு, நித்திரை, பிறப்பு இறப்பு, முதலிய காரியங்கள் நமது வல்லமையைக் கடந்து நடக்கின்றன

அக் காரியங்களை நடந்தி வைக்கும் பெருள் எது? அப்பொருள் நமது வல்லமையைக கடந்த பொருள் கடவுள்

கடவுளுக்கு வடிவம் உண்டா? உண்டு அது இந்தக் கண்ணாற் காண முடியாதது. சுத்த அறிவினாற் காணத்தக்கது. அதற்கு நீதி என்று பெயர்

நீதி வெகு ஆழமானது. மிக மிக நீளமானது. ''பங்கயத் தயனுமா லறியா நீதி'' என்பது மணிவாசகம். நீதியின் ஆழத்தையும் நீளத்தையும் காணுதற்குப் பிரம விஷ்ணுக்களுக்குக் கூடச் சுத்த அறிவு போதிய அளவுக்கு உண்டாக வில்லை. நீதியை மறைக்குங் குற்றங்கள் இரண்டு. ஒன்று, அறியாமை' மற்றது வஞ்சகம் கிக.

அறியாமை பாவமன்று: யற்சிக்குப் பயன் தாராது. அதனாற் குற்றம் எனப்படுகின்றது.

வஞ்சகம் படுகுற்றம். மகா குற்றம் நரகத்துக்கு வித்து அது அறிவு முனையை அழித்து' அந்தகாரம் செய்து கொண்டிருப்பது.

மனத்தை ஒரு கணத்திலே தன் வசப்படுத்திவிடும் நாம் அதனைச் சிறை மீட்டு அறிவு வசப்படுத்த வேண்டும் ''நீதி எது! எது!! எது!!! என்ற விசாரந்தான் வஞ்சகத்தைக் கொல்லும் படை அப்படையினாலே இச்சையை நேர் செய்து கொண்டால் அறியாமை மெல்ல மெல்ல நீங்கும் அறியாமை நீங்கச் சுத்த அறிவு உதயமாகும் அந்தச் சூரியோதயத்திலே நீதியின் பிழம்பு ஒரு சாயலாகத் தோன்றத் தொடங்கும் அறிவுச் சூரியன் மேலே எழ எழ நீதியின் உண்மைத் தோற்றம் - கை கால் முதலிய அவயவங்கள் - காட்சியளிக்கும் அடிமுடி தோன்றும்.

நீதியை விசாரிப்பதிலே விசாரித்து அந்த ரீதியிலே எவ்வித வஞ்சத் தடையுமின்றி நிலை நிற்பதிலே எவனுக்குச் சதா விருப்பம் உண்டோ, அவன் சாமயி.

அந்த விருப்பத்தை நூறாயிரம் கள்ளக் காரணங்கள் கற்பித்து எவன் வஞ்சிக்கின்றானோ அவன் சமயி அல்லாதவன்.

முந்தியவன் அகச்சமயி மற்றவன்புறச்சமயி.

அகச்சமயி சமயத்துக் குள்ளானவன், புறச்சமயி சமயத்துக்குப் புறம்பானவன்,

நீதியை வஞ்சகமின்றி விசாரித்து விரும்புவது அகம் அதற்குச் சமயம் என்று பெயர்.

## பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

வழியில் ஒரு பொருளைக் கண்டு எடுக்கின்றோம். பொருளுக்குரியவர் இன்னாரென்றுந் தெரிகிறது. விசாரித்து நிச்சயஞ்செய்ய. போதிய வழிதுறைகளும் இருக்கின்றன. பொருளை அதற்கு உரியவரிடம் ஒப்பிப்பதே நீதி என்று அறிவு சொல்லுகின்றது. வஞ்சகம் அந்த அருமந்த அறிவை மயக்கி மாயஞ் செய்து விடுகின்றது.

இந்தக் கள்ள வஞ்சகந்தான் நமது பரமசத்துரு அதனோடு சாத போர் தொடுத்துக் கொண்டே நாம் சாவதானமாயிருக்க வேண்டும் வஞ்சகம்

நீதிதான் கடவுளின் வடிவம் அதற்கு மற்றொரு பெயர் சிவம்; சிவம் என்றால் நன்மை, மங்களம், நீதிஎன்று பொருள்.

எவன் நீதியோடு சம்பந்தப்படுகின்றானோ, அவன் சிவத்தோடு சம்பந்தப்படுசின்றான்.

சிவத்தோடு சம்பந்தப்படுசின்றவனுக்குச் சைவன் என்று பெயர்.

சிவத்தோடு சம்பந்தப்பட்ட சமயம் சைவசயம்.

''மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம் ''

# சுந்தரர்

## டாக்டர் மு. வரதராசனார்

எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த சுந்தரர் வரலாறும் விந்தையானதாக உள்ளது.

அவர் பிராமணர்.

பெற்றோர்கள் ஏற்பாடு செய்த குல முறைப்படியான திருமணம் சிவபெருமானால் தடை செய்யப்பட்டதாம்.

பிறகு சிவனருள் துணை கொண்டு, வேறு குலத்துப் பெண்கள் இருவரை மணம் செய்து கொண்டு வாழ்ந்தார்.

அந்த இருவருள் ஒருவர் பரத்தையர் குடும்பத்தைச் சார்ந்த பரவையார், மற்றொருவர் வேளாளர் குடும்பத்தைச் சார்ந்த சங்கிலியார்.

இருவரிடத்தும் அன்பான வாழ்க்கை நடத்திப் பெருமை வாய்ந்த சிவனடியாரா விளங்கிப் பல பதிகங்கள். பாடினார்.

''பரவை என்னும் என் காதலிக்கும் எனக்கும் பற்றாக உள்ள பெருமானே'' என்று தம் பாடலிலேயே குறிப்பிட்டுள்ளார்.

என்றும் மணமகன்போல் விளங்கி, உலக வாழ்க்கையில் பெறும் இன்பங்களைப் பெற்று மகிழ்ந்து, சிவனைப் பாடியவர் அவர்.

துறவும் உலக வெறுப்பும் அவருடைய பாடல்களில் காண்பதற்கு அரியவை.

அவருடைய பாடல்களாக இப்போது கிடைப்பவை 1026. எல்லாப் பாடல்களும் திருஞான சம்பந்தரின் பாடல்களைப்போல் இனிய இசையமைப்பு உடையவை. அவரைப் போலவே, இவரும் பல தலங்களின் இயற்கைச் சூழலை அழகாக வருணித்துப் பாடியுள்ளார்.

தமக்குத் தேவையானவற்றைச் சிவபெருமானிடம் உரிமையோடு கேட்டுப் பாடுவது இவர் வழக்கம்.

ஆனால்,

மண்ணுலகத்துச் செல்வர்களின் வீட்டை நாடிச் சென்று அவர்களைப் புகழ்ந்து பாடித் திரியும்புலவர்களின் வாழ்வை வெறுத்துப் பாடியுள்ளார்.

''தம்மையே புகழ்ந்து இச்சையான முறையில் பேசினாலும் சார்ந்து நின்றாலும் பொருள் தர மனம் வராத பொய்மையான வாழ்வு உடைய செல்வரைப் பாடாமல், சிவனுடைய கோயிலைப் பாடுங்கள். இந்தப் பிறப்புக்கு உரிய உணவும் உடையும் பெறலாம், இடர் நீங்கி வாழலாம். மறுமையில் சிவகதியும் கிடைக்கும். ஐயமே இல்லை''.

''வீரத்தின் மிடுக்கு இல்லாத செல்வனை வீமன் அருச்சுனன் என்று புகழ்வதிலும் பயன் இல்லை. கொடுக்க மனம் இல்லாதவனைப் பாரி என்று புகழ்ந்து கூறினாலும் கொடுப்பவர் இல்லை. மூத்துத் தளர்ந்து உடல் நடுங்கும் கிழவனாகிய செல்வனை மலை போன்ற தோள் உடையவன் என்று புகழ்ந்து வாழ்த்துவதால் பயன் இல்லை. வஞ்ச நெஞ்சனை, கொடியவனை, பாவியை, கெட்டவனைச் சாது என்று கூறிப்பாடுவதால் பயன் இல்லை, ஈயாத உலோபியை வள்ளல் என்றும் கல்வி இல்லாதவனைக் கல்வி வல்லவன் என்றும் புகழ்ந்து காலம் கழிக்காதீர்கள். சிவபெருமானைப் பாடிப் பயன் பெறுங்கள்'', என்று புலவர்களுக்கு அறிவுரை கூறிப் பத்துப் பாடல்கள் பாடியுள்ளார்.

(டாக்டர் மு. வ. எழுதிய ''தமிழ் இலக்கிய வரலாறு'' என்ற நூலில் இருந்து)

# அறிவை வளர்க்க வேண்டும்

எருது நன்றாக உழைக்கிறது. இரவும் பகலும் உழைக்கிறது.

ஆனால் அதற்குப் புகழும் செல்வமும் கிடைத்து விடுவதில்லை.

ஒருவன் விறகு வெட்டுகிறான் கடினமாக உழைக்கிறான்.

அதே வேலையை அவன் வாழ்நாள் முழுவதும் செய்து வந்தால் அவன் சாதாரண விறகு வெட்டியாகத்தான் வாழ வேண்டியிருக்கும்.

விறகு வெட்டியின் உழைப்பில் அறிவு கலந்திருப்பதில்லை.

ஆராய்ச்சியாளனுடைய உழைப்பில் அறிவு கலந்திருப்பதால் அவனுக்குப்புகழ் கிட்டுகிறது.

உழைப்பில் அறிவு அதிகமாக அதிகமாக, கிடைக்கும் புகழும் அதிகரித்துக் கொண்டே செல்லும்.

ஒரே வேலையை தினமும் செய்து வருபவன் வாழ்க்கையில் கட்டாயம் முன்னேறமுடியாது பல புதிய காரியங்களைத் தைரியத்துடன்செய்ய ஆரம்பித்துப் புதிய அனுபவங்களைத் தேடிக்கொள்ள வேண்டும்.

நிறையப் படித்து ஒருவன் தன் அறிவையும் செயல் திறமையையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

பல அறிஞர்களுடன் பழகி தன் அறிவாற்றலை - கற்பனையின் தரத்தை - உழைப்பை - உயர்த்திக் கொள்ள வேண்டும்.

தன் அறிவைக் கூர்மையாக்கிக் கொண்டவனுக்குத் தான் மற்றவர்களுக்குப் புலப்படாத பல விஷயங்கள் புலப்படும்.

## மகாகவி பாரதியாரின் சங்கநாதம்

நமக்குத் தொழில் கவிதை;
நாட்டிற்கு உழைத்தல்:
இமைப் பொழுதும் சோராது
இருத்தல்;
உமைக்கினிய
மைந்தன் கணநாதன்
நம் குடியை வாழ்விப்பான்'
சிந்தை யே,
இம் மூன்றும் செய்!

❋ ❋

பக்தி உடையார்
காரியத்தில் மதறார்,
மிகுந்த பொறுமையுடன்
வித்து முளைக்கும்
தன்மை போல்
மெல்லச் செய்து
பயன் அடைவார்,
சக்தி தொழிலே
அனைத்தும் எனின்
சார்ந்த நமக்கு
சஞ்சலம் ஏன்?
வித்தைக்கு இறைவா!
கணநாதா!
மேன்மைத் தொழிலில்
பணி எனையே

❋ ❋

மொய்க்கும் கவலைப்
பகை போக்கி
முன்னோன் அருளைத்
துணையாக்கி
எய்க்கும் நெஞ்சை
வலி உறுத்தி
உடலை இரும்புக்கு
இணை ஆக்கி
பொய்க்கும் கலியை
நான் கொன்று
பூலோகத்தார்
கண் முன்னே
மெய்க்கும்
கிருத யுகத்தினையே
கொணர்வேன்!
தெய்வ
விதி இஃதே

### நிறையச் சிந்திக்க வைக்கும் அருமையான விஷயம்

### ஜெயகாந்தன் எழுதிய

# 'அந்தப் புத்தகம்'

பள்ளிக்கூடம் போகிற பிள்ளைகளுக்கு ஆண்டு தோறும் நாற்பது ஐம்பது ரூபாய்களுக்குப் புத்தகங்களும் அந்த அளவு ரூபாய்க்கு நோட்டுக்களும் வாங்க வேண்டியிருக்கிறது. ஆண்டு முடிவில் ஒவ்வொரு நோட்டிலும் பாதிக்கு மேல் அப்படியே இருக்கிறது. புத்தகங்களும் மாறிப்போவதால் பழைய புத்தககங்களை வேறு மாணவர்களுக்கு தர முடிவதில்லை. பிள்ளைகளும் பழைய புத்தகங்களை வைத்துக்கொள்ளவும், போன வருஷத்து நோட்டுப் புத்தகங்களைச் சரி செய்து உபயோகிக்கவும் அவமானப்படுகிறார்கள். பள்ளி நிபந்தனைகளில் ஒன்றாக- எல்லாவற்றையும் புதிதாக வாங்கி வரும்படி நிர்ப்பந்திக்கிறார்கள்.

சிக்கனமும் எளிமையும் கற்றுத் தராத கல்வி என்ன கல்வி? போலிக் கௌரவத்தையும் டாம்பீகத்தையும் இந்தப் பள்ளிகளும் கல்வியாளர்களுமா கற்றுத் தருவது?

ஒரு குழந்தை படிப்பது என்பது இவ்வளவு காஸ்ட்லியாக இருப்பதுதான் சகலச் சீரழிவுகளுக்கும் காரணமாகிறது. ஏனெனில் இவ்வளவு செலவு செய்து படிக்க வைக்கிற பெற்றோர்கள் அதை ஏதோ முதலீடுபோல் வட்டியுடன் திரும்ப எதிர் பார்க்கிறார்கள். தேர்தலுக்குச் செலவு செய்தவன் லஞ்சம் வாங்குவது எப்படித் தவிர்க்க முடியாததோ, அவ்வளவு தவிர்க்க முடியாத ஊழலாய் ஒவ்வொருவரின் சொந்த வாழ்வும் மாறிப் போகிறது.

கல்வி தானமாகத் தரப்படவேண்டும். அது தொழிலாகவும் வியாபாரமாகவும் ஆகியிருக்கிறது. முதல் கோணல் முற்றும் கோணலாவதில் முடிகிறது.

என் தாத்தா எனக்குப் புத்தகங்களோ நோட்டுக்களோ வாங்கித் தந்ததே இல்லை. கொயர் கொயராகப் பேப்பர் வாங்கிக் கொண்டு வருவார். என்னையும் கூட உட்கார வைத்துக் கொண்டு நோட்டுப் புத்தகங்கள் தயார் செய்வார். நீலம், சிவப்பு வர்ணப் பென்சில்களால் கோடு போடுவார். பைண்டு செய்வார். நானும் கூட உதவுவேன். அழகான நோட்டுப் புத்தகங்கள் தயாராகிவிடும். பாடப் புத்தகம் கூட அவரேதான் தயாரிப்பார்.

தாமரைத் தமிழ் வாசகம் என்று ஒரு கையெழுத்துப் புத்தகம் எனக்கு என் தாத்தா தயாரித்துக் கொடுத்ததை வெகு நாட்கள் வைத்திருந்தேன். அழகாகப் படங்கள் வரைந்து, வண்ண வண்ண மையினால் பாடங்கள் எழுதி விசேஷமாக எனக்கென்று தயாரித்த ஒரே பிரதி அது.

தூத்துக்குடி வெகு தொலைவிலிருக்கிறது. தொலைவாக இருக்கிற ஊர்களுக்கு ரயிலில் பிரயாணம் செய்து

(4 ஆம் பக்கம் பார்க்க)


## தேவை

❦ மெஷின் இயக்குனர்கள்
அச்சுக் கோப்பவர்கள் ❦

முன்னர் வேலை செய்துள்ள இடங்களில் பெற்ற நற்சாட்சிப் பத்திரங்களையும் கொண்டு நேரில் வரவும்.

## விற்பனை முகவர்கள்

''சூரியகாந்தி பத்திரிகைக்கு குடா நாடு முழுவதும் விற்பனையாளர்கள் தேவை. முற்பணம் கட்டக் கூடியவர்கள் மட்டும் நேரில் வரவும்

-நிர்வாகி.

## சூரியகாந்தி

68/1 ராசாவின்தோட்டம் வீதி
யாழ்ப்பாணம்

# சூரியகாந்தி

## கிரகணம் நிரந்தரமல்ல!

சூரியனைக் கிரகணம் பிடிப்பது அப்படி ஒன்றும் ஆச்சரியப்பட வேண்டிய விஷயம் அல்ல.

பூரண சூரிய கிரகணம் நிகழும் நேரங்களில் முழுமையான இருள்சூழும். சூரிய அஸ்தமனமே ஆகிவிட்டது போன்றதொரு தோற்றம் ஏற்படும்.

பறவைகளும் விலங்குகளும் நடத்தையில் மாறுபடும்

மனிதர்களும் சூரிய கிரகணத்தைக் கண்டு பயந்த ஒரு காலம் இருந்தது பயத்தின் காரணமாக பல கதைகளும் பிறந்தன. சூரியனைப் பாம்பு விழுங்கிவிட்டதாகக் கருதினார்கள் பயந்தார்கள்.

மக்களின் பயத்தை தமது காசு பிடுங்கும் வேலைக்குப் பயன்படுத்திக்கொள்ளும் பௌராணிகர்களும் பூசாரிகளும் மந்திர நிவாரணம் தரமுன் வந்து மேலும் குழப்பத்தை அதிகரித்தார்கள். ஆனால்

விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாக இப்போது கிரகணம் பற்றிய உண்மைகள் பள்ளிப் பிள்ளைகளுக்கே நன்கு விளங்கும் சங்கதிகள் ஆகி விட்டன.

கிரகணங்களைக் கண்டு யாருமே பயப்படத் தேவை இல்லை.

கிரகணத்தின்போது சூரியன் நமது கண்களுக்குத் தெரியாமல் போவது வாஸ்தவம்.


ஆனால் அது நிரந்தரமானதல்ல!

கிரகணம் விலக சூரியன் மறுபடி பேரொளிப் பிரகாசத்தோடு நமது கண்களுக்கு தெரியும் என்ற உண்மைதான் நாம் தெரிந்துகொள்ள வேண்டியது!

கிரகணத்தின்போது சூரியன் மறைவதை இயற்கையான ஒரு நிகழ்வு என்று ஏற்றுக்கொள்கிற அதே நேரத்தில்-

யாராவது ஒரு சிலர் தங்களது கைகளை உயரத் தூக்கி சூரியனை மறைப்பதுபோலப் பிடித்துக்கொண்டு 'ஆஹா, இதோ பார்! சூரியனை நாங்கள் மறைத்து விட்டோம்' என்று பிதற்றினால் அவர்களை முட்டாள்கள் வர்க்கத்தில் சேர்த்து ஒதுக்கித் தள்ளுவதைத் தவிர நாகரிக சமுதாயத்துக்கு வேறு வ்ழி இல்லை!

## மரமும் பட்டையும்



நமது சமூக ஆசாரங்களிலும் பழக்கவழக்கங்களிலும் எத்தனையோ தீமையான அம்சங்கள் இருக்கின்றன.

அவைகளை மாற்றவேண்டியதுதான்.

ஆனால் அதற்காக அந்த ஆசாரங்களையும் பழக்க வழக்கங்களையும் ஏற்படுத்திய நமது முன்னோர்களைக் குறை கூறவேண்டியதில்லை.

அந்தக் காலத்தில் அவைகளுக்கு ஏதோ உபயோகம் இருந்திருக்கலாம். தற்போது அவை நமக்கு விளங்கவில்லை என்றால் அதற்காக முன்னோர்களை மூடர்கள் என்று சொல்லக்கூடாது.

மரங்களுக்கு மேலே பட்டை இருக்கிறது.

மரங்கள் சீவித்திருப்பதற்கும் வளர்வதற்கும் அந்தப் பட்டை மிகவும் அவசியம்.

ஆனால் மரம் முதிர்ச்சியடைந்து வெட்டிய பின்னர் கட்டட வேலைகளுக்கு உபயோகப்படுத்தும்போது தச்சன் முதலில் பட்டையைத்தான் செதுக்கி எறிகிறான்.

அப்போது பட்டைக்கு எவ்வித உபயோகமும் இல்லை.

ஆகையால் மரத்துக்குப் பட்டையே வேண்டியதில்லை என்று சொல்லிவிடலாமா?

பட்டையில்லாமலே மரத்தை வளர்த்திருக்க வேண்டும் என்று அந்தத் தச்சன் மரம் வளர்த்தவனைத் திட்டினால் அவனை மூடன் என்று சொல்லமாட்டோமா?

### ராஜாஜி பொன் மொழி

பிழையைச் சரிப்படுத்திக் கொள்ள முயற்சி செய்வதில் அவமானம் இல்லை.

தீய மனிதர்கள் பயத்துக்குக் கீழ்ப்படிகிறார்கள் நல்ல மனிதர்கள் அன்புக்குக் கீழ்ப்படிகிறார்கள்

# கொஞ்சம் "ரசனை"யான நகைச்சுவைகள்!
## பல பத்திரிகைகளிலிருந்து திரட்டியவை.

மனைவி: அடேடே! நிறைய சாமான்கள் வாங்கிகிட்டு வந்திருக்கீங்க போலிருக்கே...

கணவன்: ஆமாம்... ஒரு பக்கெட் வாங்கினேன் இந்த பிரஷை இனாமா கொடுத்தாங்க. ஒரு துடப்பம் வாங்கினேன் இந்த டம்ளரை இனாமாக கொடுத்தாங்க. ஒரு குடை வாங்கினேன் இந்த ஷேவிங் ஸெட் இனாமாக கொடுத்தாங்க..

மனைவி: யார் உங்ககூட இந்த சின்னப்பையன்?

கணவன்: ஒரு பாக்கெட் ''நிரோத்' வாங்கினேன். இந்தப் பையனை இனாமாக கொடுத்தாங்க.

❋ ❋ ❋

ஸார் ஸோஷியலாப் பழகிறது - ஸோஷியலாப் பழகிறது கறீங்களே - இந்த ஸோஷியலாய்ப் பழகுறதுன்னா என்னங்கஸார்?

''ரொம்ப ஸிம்பிள் உம்ம சம்சாரம் உம்மோடே எப்படிப் பழகிறா?''

''என்னோட சினிமாவுக்குப் போறா, டிராமாவுக்குப் போறா, பீச்சுக்குப் போறா, இப்படித்தான் எங்கூட பழகறா!'

''இதே மாதிரி உம்ம சம்சாரம் என்னோட பழகினா அதுதான் ஸோஷியலாப் பழகறது!,,

❋ ❋

''பெண்கள் புதிதாக உடைகளை அணிந்து கொள்வது ஆண்களைத் திருப்திப்படுத்தவா அல்லது மற்றப் பெண்கள் பொறாமையுடன் பார்ப்பதற்கா?'

நிச்சயம் பெண்கள் பொறாமைப்படத்தான். ஆண்களை திருப்திப்படுத்த அவர்கள் எதையும் அணிய வேண்டியதில்லையே!

❋ ❋

கைரேகை பாப்பவர் சொன்னார்! ''உனக்குக் கல்யாணம் ஆகிவிட்டது,,

''சரி''

''உன் மனைவி பெயர் ரோஸி''

''அதுவும் சரி''

''நீ இரண்டு குழந்தைகளுக்குத் தந்தை''

''தப்பு. மூன்று குழந்தைகள்''

''நீ அப்படி நினைத்துக் கொண்டிருந்தால் நான் என்ன செய்யட்டும்'' என்றார் கைரேகைக்காரர்.

❋ ❋

''கண்ட கண்ட பெண்களோடு சுற்றுவதை நீ உடனே நிறுத்த வேண்டும். இல்லாவிட்டால் ஒரு வாரத்துக்கு மேல் உயிரோடு இருக்கமாட்டாய்'' என்று டாக்டர் எச்சரித்தார்

என்ன டாக்டர் இது! நான் நல்ல ஆரோக்கியத்துடன் இருக்கிறேனே!'' என்றான் இளைஞன்:

''அது சரி அந்தப்பெண்களில் ஒருத்தி என் மனைவி, என்றார் டாக்டர்.

❋ ❋

ஒரு காரியாலயத்தில் பெரிய மானேஜர் எட்டாவது மாடியிலிருந்து குதித்து தற்கொலை செய்து கொண்டார். அது பற்றி அவருடைய செக்ஸியான செக்ரட்டரியை விசாரித்தார்கள், அவள் சொன்னாள்:

நான் இங்கே வேலையில் சேர்ந்து ஒரு வாரத்துக்கெல்லாம் எனக்கு 25 டாலர் சம்பள உயர்வு கொடுத்தார். அடுத்த வாரம் அருமையான கவுனும் ஐந்து ஜோடி நைலான் ஸ்டாக்கிங்சும் தந்தார். அதற்கு அடுத்த வாரம் விலை உயர்ந்த சால்வை தந்தார். அதற்கு அடுத்த வாரம் ஒரு வைர நெக்லஸ் தந்தார். தந்துவிட்டு ''இரவு என்னோடு தங்க முடியுமா? அதற்கு நான் என்ன தரவேண்டும்?'' என்று கேட்டார். ''வழக்கமாக ஆபீசில் எல்லாரிடமும் நான் பத்து டாலர்தான் வாங்கிக் கொள்வேன். நீங்கள் என்கிட்டே ரொம்ப பிரியமாய் இருந்திருக்கிறீர்கள். நீங்க ஐந்து டாலர் தந்தால் போதும்'' என்றேன். அப்போதுதான் அவர் ஜன்னல் வழியே வெளியே குதித்தார்.

❋ ❋

அடுத்த வீட்டில் இருந்த பெண் நல்ல அழகி லில்லியின் கணவன் ஏதாவது ஒரு சாக்கில் அங்கே போவான். திரும்பி வர ரொம்ப நேரமாகும்.

ஒரு முறை அங்கே சென்றவன் லேசில் திரும்பவில்லை. லில்லி அங்கே போய் கதவைத் தட்டினால் ''ஜான்'' எத் எத்தனை நேரம் நீ வர?''

உள்ளேயிருந்து பெண்ணின் பதில் வந்தது ''இதோ பார் இப்படி அடிக்கடி குறுக்கிட்டிருந்தேயானால் இன்னும் நேரமாகும்.''

❋ ❋

இப்படி ஊரைச் சுற்றிவிட்டு வீட்டுக்கு லேட்டா போனா உன் மனைவி திட்டுவாளே?

''மனைவியா? எனக்கு இன்னும் திருமணமே ஆகவில்லையே!''

''அப்படியானால் எதற்காக இப்படி ஊரைச் சுற்றிக் கொண்டிருக்கிறாய்?''

❋ ❋

இரண்டு சின்னப் பையன்கள் ஏட்டிக்குப் போட்டியாகப் பேசிக்கொண்டிருந்தார்கள்

'உங்க அப்பாவைவிட எங்கப்பாதான் உசத்தி...'

'இல்லை. எங்க அப்பாதான்...!'

'உங்க அண்ணாவைவிட எங்க அண்ணாதான் உசத்தி...!,

'இல்லை எங்க அண்ணாதான்!...'

'உங்க அம்மாவைவிட எங்க அம்மாதான் உசத்தி...!'

மற்றப் பையன் சற்று நேரம் யோசித்தான். பின்னர் சொன்னான்-

'இருக்கலாம் எங்க அப்பாவும் அப்படித்தான் சொல்கிறார்...!'

❋ ❋

''என்னுடைய முன் பற்கள் இரண்டு கீழே விழாமல் ஒரு வாரமாய் வலி உயிரை எடுத்துக் கொண்டிருக்கிறது. என்ன செய்யலாம்...''?

''ஒரு இளம் பெண்ணிடம் காட்டிப் பாருங்களேன்...!''

❋ ❋

ஒருத்தி: எங்க தெருவிலிருக்கும் கோமளம் ரொம்பக் கஞ்சம். ''ப்ரா''வே போடமாட்டா! இன்னொருத்தி: எனக்குப் பக்கத்து வீட்டிலிருக்கிற கீதா. இன்னும் மோசம். வெறும் ''ப்ரா'' தான் போடுவா!

❋ ❋

அவன்: காலை நேரத்தில் வேலைக்குப் போறப்போ அதைக் காணோம் இதைக் காணோம்னு தேடிக்கிட்டு இருக்கேன். இங்கே வந்து அதை மாட்டு இதை மாட்டுன்னு நச்சரிக்கிறியே... போ... போ... அவள்: எதுக்குக் கத்தறீங்க... ஸூக்கு மாட்டறத்துக்கு என்ன ஒரு மணி நேரமா ஆகப்போகுது? கழற்றதுன்னா மட்டும் எவ்வளவு வேகமாக் கழட்டறீங்க...!

❋ ❋

அவன் அவளுக்கு எழுதினான்: ''அழகே உன்னை ஆராதிக்கிறேன்''

அவள் பதில் எழுதினாள்: ''அழுக்கே உன்னை நிராகரிக்கிறேன்''

❋ ❋

பேராசிரியருக்குக் குழந்தை பிறந்தது. அதே சமயத்தில் அவருடைய ஆராய்ச்சிப் புத்தகத்துக்குப் பரிசும் கிடைத்தது.

குழந்தை பிறந்ததற்குப் பாராட்டுத் தெரிவித்தார் ஒருவர். பேராசிரியருக்கோ தன் புத்தகத்தைப்பற்றியே ஞாபகம். ''என் அஸிஸ்டெண்டுகள் இரண்டு பேர் ரொம்ப உதவி செய்தார்கள். உங்கள் பாராட்டு மொத்தமும் அவர்களைத்தான் சாரும்'' என்றார்.

❋ ❋

தன் உறவுப் பெண் ஒருத்தி ஆண்பிள்ளை மாதிரி டிரெஸ் பண்ணிக்கொண்டு ஏமாற்றி, ராணுவத்தில் சேர்ந்து விட்டதாக ஒருவன் சொன்னான்.

''ஆனால் ராணுவத்தில் மற்ற எல்லாருடனும் சேர்ந்து குளித்து டிரெஸ் பண்ணிக்கொள்ள வேண்டியிருக்குமே?''

''ஆமாம்''

( 4ஆம் பக்கம் பார்க்க)

# "பார்ட்டிக்கு லிக்கர்" இதுதான்இப்ப யாழ்பாணம்

பெரியதுரை



''ஹலோ...''

''யாரது?''

''நான்தான் தூனா!... ஓம் சிவன் கோவிலடித் தூனா! இங்கே எல்லாம் சரி என்கிறார்களே! யார் பேசுறது குட்டிப் பிசாசுதானே!''

''ஓமோம் .. எல்லாம் ஓ. கே... எப்ப இங்க வாறியள்...?''

''நாளைக்கு வாரான்... வரும் போது என்ன கொண்டு வர...?

''ஒன்றும் வேண்டாம்... முடியுமெண்ட... நல்ல ஃபோரின் லிக்கர் போத்தல் ஒன்று... பெரிய பிசாசுக்குக் கொண்டு வாருங்கோ.-

❋ ❋

''வாருங்கோ''

நேற்றுப் பின்னேரம் வந்தனான். வந்த உடனே ஒரு வேலை... அதுதான் உடனை வர முடியல்லை. பெரிசு நிக்குது போலை... போத்தலைக் கொண்டுபோய் கொடுப்பமே...''

''என்ரை கடவுளே... நீரும் வந்தா அந்தாள் வாங்காது கோவிக்கும். உப்பிடி உதிலை வையுங்கோ... நான் பிறகு அவர் தனிய இருக்சேக்கை நீங்க தந்தனியள் எண்டு குடுக்கிறன்...இப்ப ஆரோடையன் கொழும்புக்கு அவசர மாக கதைக்க வேணுமே...''

''ரொம்ப தாங்ஸ்.. இப்ப ஒருத்தரோடையும் கதைக்க வேண்டாம்''

''அப்ப''

சரி நான் போயிட்டு வாறன். எப்படியும் என்ரை அலுவலை கெதியா முடிச்சுத் தரவேணும்''

எல்லாம் பெரிய பசாசு மனம் வைச்சாத்தான்! சரி நீங்க போய்விட்டு வாங்க..''

❋ ❋ ❋

''அட ஆர் தம்பி மகேந்திரனே இதென்ன கண்டயிலை சாமானெல்லாம் கூடிகொண்டு போகுது உன்பாடு பரவாயில்லைப் போல!

''என்னத்தைச் சொல்ல, நீங்க நினைக்கிற மாதிரி இல்லை இஞ்சை ஆர் ஆரோ கொண்டந்து வச்சதெல்லாம் கிடக்கு''

''அப்படியே அட அதென்ன விக்கரும் விக்கிறனியே..?

''இல்லை அண்ணை இது.''

''எங்கை எடு பாப்பம்''

''இந்தாருங்கோ இது வெறும் பெட்டிதான்! உண்மையா ஆருக்கன் வேனுமெண்டா ஓடர் எடுத்து நாளைக்குத் தரலாம்''

''அட கடவுளே''

''ஏன் அண்ணை கடவுளைக் கூப்பிடுறியல்''

''இதார் உனக்குத் தந்தது''

''அண்ணை ஒருத்தருக்கும் சொல்லிப் போடாதையுங்கோ இது சின்னப் பிசாசுதான் இங்கை கொண்டந்து வைச்சது''

''அட அவனுக்கு நான்தானே கொடுத்தனான், அதே பெட்டியட்ட பெரிய பிசாசுக்கெண்டு என்னட்டைக் கேட்டல்லோ வாங்கினவன்!''

''அண்ணை இதுதான் இப்ப யாழ்ப்பாணம்!''

## கொஞ்சம்....

''சண்டு பிடிச்சு வெளியில சொல்லிட மாட்டாங்களா?''

''சண்டு பிடிப்பாங்க. ஆனால் வெளியில் சொல்மாட்டாங்க!''

❋ ❋

அப்போதுதான் அவர்களுக்குக் குழந்தை பிறந்திருந்தது. புதுக் கணவன் சங்கடத்துடன் ''குழந்தைக்குப் புட்டிப். பால்தான் பழக்கப்படுத்தணும். இல்லாவிட்டால் உனக்கு. கஷ்டம்'' என்றான்.

''எனக்கென்ன கஷ்டம்?'' என்று அவள் திகைத்தாள். ''வந்து... குழந்தை வாயில் படுவது எதுவானாலும் கொதிக்க வைக்கணும்னு டாக்டர் சொன்னாரே...!''

❋ ❋

ஒரு கவிதை: அவளுக்கு மேல் மாடி காலி. ஆனால் என்ன பிரமாதமான மாடிப்படிகள்!

❋ ❋

நியூ ஏ.பி.எம்
வீடியோ சென்ரர்
தரமான பழைய புதிய வீடியோ கசற்றுக்களை
வாடகைக்குப் பெற்றுக்கொள்ள
NEW A. B. M.
VIDEO CENTRE
205 கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம்

சூரியகாந்தி
என்றும் நன்றாய் மலர்ந்து நின்று நிலைபெற
நல்வாழ்த்துக்கள்
நியூ கல்யாணி நகை அகம்
87 கன்னாதிட்டி வீதி யாழ்ப்பாணம்

# பெரிதாகச் சத்தம் போட்ட ஜனாதிபதி

எதிர்க் கட்சியினரின் கூட்டங்களை ஆளும் கட்சி குழப்பி வருவதாக பலத்த புகார்.

ஒரு எம்.பி பற்றி ஜனாதிபதியிடம் முறைப்பாடு சென்றிருப்பதாகக் கேள்வி.

அந்த எம்.பி ஏதோ அலுவலாக ஜனாதிபதியைச் சென்று சந்தித்தபோது வசமாக வாங்கிக் கட்டிக்கொண்டாராம்.

ஐக்கிய தேசியக் கட்சியினரின் கூட்டங்கயைக் குழப்புவதில் ஆர்வம் காட்டும் அந்த எம்.பியைக் கண்டதும் ''இனிமேல் இந்த மாதிரியான வேலைகளில் ஈடுபட்டால் உம்மைக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளிவிடுவேன்'' என்று பெரிதாகச் சத்தம் போட்டாராம் ஜனாதிபதி.

நடுங்கிப் போய்விட்டாராம் அந்த எம்.பி!

# விளையாட்டுப் போட்டியில் அசமந்தப் போக்கு

மாசி பங்குனி மாதம் என்றால் மணவர்களுக்கு கொண்டாட்டம் இக்காலப் பகுதியிலேயே பாடசாலைகளில் இல்லங்களுக்கு இடையேயான விலையாட்டுப் போட்டிகள் நடைபறுகின்றன.

இப்போட்டிகளின் போது 400 மீற்றர் 800 மீற்றர் 4 × 100 மீற்றர் 4 × 200 மீற்றர் போன்ற ஓட்டப் போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்களில் அனேகமானோருக்கு போட்டி விதி முறைகள் தெரியவில்லை.

கயாழ் மாவட்ட பாடசாலைளில் அனேகமான விலைளயாட்டு மைதானங்களில் முதலாவது சுவடு 200 மீற்றர் சுற்றளவைக் கொண்டது அதனைத் தொடர்ந்து வருன்ற ஒவ்வொரு சுவடுகளும் சுற்றளவில் அதிகரித்துச் செல்கின்றவையாக காணப்படும்

போட்டிகளில் பங்குபற்றும் போட்டியாளர்கள் மேனர் குறிப்பிட்ட போட்டிகளில் பங்குபற்றும் போது முதலாது சுற்று அதாவது 200 மீற்றர் தூரம் முடியும் வரை சுவட்டு ஒழுங்கிலேயே ஓடுதல் வேண்டும் அதன் பின்னர் தமது சுவட்டு ஒழுங்கு மாற்றி சுற்றளவில் குறைந்த முதலாவது சுவட்டில் ஒடலாம்.

அண்மையில் நடைபெற்ல அனேகமான பாடசாலை விளையாட்டுப் போட்டிகளின் போது 17 வயதின் கீழ்பிரிவிலும் 15 வயதின் கீழ்பிரிவிலும் பங்குபற்றிய அனேகமான போட்டியாளர்கள் மேலே குறிப்பிட்ட நடைமுறையை பின்பற்றாது 200 மீற்றர் தூரம் ஓடி முடிந்த பின்னரும் சுவட்டு ஒழுங்கிலேயே ஓடியதைக் காணக் கூடியதாக இருந்தது.

இவ்வாறு நடைபெறும் போட்டிகளில் உண்மையான முதன்மை வீரர்களை தேர்ந்தெடுக்க முடியாது இதனால பல சிறந்த போட்டியாளல்கள் வலய மட்டப் போட்டிகளிலும் பங்குபற்ற முடியாமல் போகின்றது.

இவ்வாறான நிலமை ஏற்படுவதற்கு விளையாட்டுர துறை ஆசிரியர்களினதுத் இல்லபொறுப் பாசிரியர்களினதும் அசமந்தப் போக்கே காம்ணம் என பெற்றோர்களும் பார்வையாளர்களும் பேசிக் கொள்வதைக் காணக்கூடியதாக உள்ளது.

## கொழும்பு...

இந்த தாக்குதலின் நோக்கம் மருதானைப் பொலிஸ் நிலையத்தைக் குறிவைத்ததாக இருக்கலாம் எனவும் அந்த வட்டாரங்கள் கருதுவதாகத் தெரிகிறது,

கொழும்பு பாதாள உலகக் கும்பல்களினதும் கள்ளக் கடத்தல் போதைவஸ்து வியாபாரம் செய்வோரினதும் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டு பெரும் பணம் தேடுவோரினதும் ஆதிக்கம் அதிகரித்திருப்பதாக பரவலாக தகவல்கள் தெரிவிக்கின்றன,

சில அரசியல்வாதிகளின் ஆதரவும் இந்தக் கும்பல்களுக்கு இருப்பதாக பலமான குற்றச்சாட்டுக்களும் எழுந்துள்ளன,

மருதானை பொலிஸ் நிலையத்திலேயே இந்தக் கள்ளக் கடத்தல் போதைவஸ்து வியாபார கோஷ்டி பற்றிய விசாரணைகள் நடந்து வருகின்றன,

மருதானையில் சென்ற வியாழன் மதியம் 12.40 மணிக்கு புகையிரத நிலையத்துக்கு முன்பாக வாகனமொன்றை ஓட்டி வந்தவர் வாகனத்தில் நிறைக்கப்பட்டிருந்த வெடிமருந்துகளை வெடிக்கச் செய்ததில் ஸ்தலத்திலேயே 30 பேர் மரணம் அடைந்தனர் இருநூற்று ஐம்பது பேருக்கு மேல் காயம் அடைந்தனர், முப்பத்திநாலு வாகனங்களுக்கு மேல் முற்றாக சேதமடைந்தன,

இத் தாக்குதல் தொடர்பாக மேற்படி வாகனத்தின் சாரதி புலேந்திரனின் மனைவியான சுபத்திரா தேவியும் இரு மகள்களும் கைது செய்யப்பட்டுள்ளனர் பஸ்ஸின் கண்டக்டர் தங்கத்துரை காந்தனும் கைது செய்யப்பட்டுள்ளார் இது தவிர அர்சுணன் புலேந்திரன், அர்ச்சுணன் யோகேந்திரன் என்ற இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களை மட்டக்களப்பு பொலிசார் கைது செய்துள்ளனர்;

கொழும்பு பாதாள உலகத்தைச் சேர்ந்த பலரும் விரைவில் கைது செய்யபடலாம் என்று நம்ப படுகிறது,

## அந்தப் புத்தகம்...

உள்ள ஊர்களுக்கு வண்டிகளில் போகிறோம் அடுத்திருக்கும் ஊர்களுக்கு நடந்து செல்கிறோம்' என்றபாடத்தின் வரிகள் என்நினைவுக்கு வருகிறது.

அந்தப் புத்தகத்தை நான் காணமல் போக்கி விட்டதை நினைக்க எனக்கு இப்போது வருத்தமாக இருகிறது. நான் அதைக் கழித்து விடவில்லை.

இப்போது நமது பிள்ளைகள் எவ்வளவு புத்தகங்களைப் படித்துக் கிளித்துப் போடுகிறார்கள்! அதற்காக அவர்கள் வருத்தப்படுவதும் இல்லை. ஏன் புதிதாக மற்றொன்று கிடைக்கும் என்று மகிழ்ச்சியே அடைகின்றார்கள். ஏன் தெரியுமா?

இந்தப் புத்தகங்கள் அன்புள்ளம் கொண்ட ஒரு தாத்தாவினால் இவர்களுக்கென்று பிரத்யேகமாகத்தயாரிக்கப்பட்டவை அல்ல. வியாபாரிகளால் வியாபரத்துக்காகத் தயாரிக்கப் பட்டவை அதில் பாதுகாத்து வைக்க என்ன இருக்கின்றது? என் தாத்தா தயாரித்துத் தந்த அந்தப் புத்தகம் மாதிரியா இவையெல்லாம்...?

''சூரிய காந்தி''
நிருபர்கள் விற்பனையாளர்கள் அனைவரும் உடன் நேரடியாக தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் வேண்டப் படுகின்றார்கள். -நிர்வாகி

# நாகரிகம்

மனிதனுக்குச் செல்வம் கதவைதான்- ஆனல் அதுவே வாழ்க்கையின் நோக்கமாகாது. அமைதியையும் பேரின்பத்தையும் செல்வம் தர முடியாது. நமக்குத்தேவை தூய்மையான இதயம்தான். வாழ்க்கை மிகவும் செயற்கை ஆகிவிட்டது. புதிய நாகரிக வழக்கங்ககிக்கு பெழுமளவு பணம் வீனகிறது. இப்படிச் செலவாகும் பணம் நற்செயல்களுக்கும் அறச்செயல்களுக்குப் சமூதாயச்சேவைக்கும் பயன்படுத்தப்பட்டால் மனிதன் இறைநிலைக்கு மாறி விடுவான். நிலையான அமைதியும் பேரின்பமும் பெற்ற மகிழ்வான்-நவநாகரிக மக்களிடம் இப்பேது அமைதியின்மை ஆசை சஞ்சலம், பயம், வாட்டம், முகம் வெறுத்தல் ஆகியவற்றைத்தான் பார்க்கிறீர்ள்ள - உங்களது தேவைகலையுக் ஆசைகளையும் பெக்கிம் கெண்டு விட்டீர்கள். எளிமை மறைந்து போய்விட்டது. எங்கு பார்த்தாலும் அமைதியின்மையும் கலக்கமும், குழப்பமும், தடுமாற்றமும் நிறைந்தாகிவிட்டது.

இயற்கையோடு இசைந்த எளிய வாழ்க்கையை நடத்துங்கள். எளிய உடைகளை உடுத்துதுகள். தினமும் உலாவச் செல்லுங்கள். எளிய உணவை உட்கொருள்ருங்கள். கடினாக உழைத்து வாழுங்கள். தன்னம்பிக்கையுளன் இருங்கள். வியர்வைசிந்திப்பொருள்ட்டுங்கள். புலன்களையும் மனத்தையும் கட்டுப்படுத்துங்கள். உன்னதமான பன்புகளை வளர்த்துக்கொள்ளுங்கள். இறைவனை நினைவில் கொள்ருங்கள். அவர் இருப்கதை உணருங்கள். உண்மை பேசுங்கள். பேதங்களை அகற்றக் கற்றுக்கொள்ளுங்கள்.

சுவாமி சிவானந்தர்.

தொகுப்பு- க. கலைராசா.

# தீக்காயத்தால் உயிரிழப்பு

யாழ் மாவட்டத்தில கடத்த இரணடு மாதங்களில் மட்டும் தற்கொலை முயற்சியிலும் விபத்துக்ளின்போதும் சுமார் 25 ற்கும் மேற்பட்டோர் எரிகாயதிற் குள்ளாகினர் இவர்களில் பத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர் உயிரிழந்தவர்களில கற்பிணித் தாய் ஒருவரும் ஒரு வயதுக் குழந்தை ஒன்றும் அடங்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

## துப்பாக்கிச்சூட்டில் மரணம்

கடந்த சனிக்கிழமை மாலை 7.25 மனியளவில் வட்டுக்கோட்டைப் பகுதியில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இளைஞ்ஞர் ஒருவர் பலியானார்

இவரது சடலம் சுண்ணாகம் பொலீஸ்நிலைய பொலீஸ்சாரால் யாழ் போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டது சடலத்தின் முதுகுப்பகுதியில் துப்பாக்கிச் சூட்டு காயங்கள் காணப்பட்டன.

இவரது சடலம் இனங்காணும் பொருட்டு வைத்திய சாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

# குடும்பஸ்தர் சுருக்கிட்டு மரணம்

குடும்பத் தகராறு காரணமாக குடும்பஸ்தர் ஒருவர் சுருக்கிட்டு தற்கொலை செய்ததாக கூறப்படும் சம்பவம் 8.3.98 ஞாயிறு மதியம் கொழும்புத்துறை பகுதியில் இடம் பெற்றது

கண்டிச்சந்தி கொழும்புத் துறையை சேர்ந்த அருணாசலம் மயில்வாகனம் (65 வயது) என்பவரே தற்கொலை செய்தவராவார்

இவரது சடலம் யாழ் பொது வைத்தியசாலையில் ஒபடக்கப்பட்டுள்ளது.

''சூரிய காந்தி'' நிறுவனத்துக்காக அவர்களது அச்சகத்தில் 1998ம் ஆண்டு மார்ச் 10ம் தேதி 68/1, ராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம் முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. ஆசிரியர்: க. குமாரசாமி,